நாள். 25.09.2015

# கருத்தரங்கச் சுற்றறிக்கை - I

பேராசிரியத் தோழர்களே! தோழியரே!

இனிய வணக்கம். நமது இயக்கத்தின் பொதுச் செயலாளர் அவர்களின் சுற்றறிக்கை எண். 5/2015 நாள். 23.09.2015ல் குறிப்பிட்டுள்ளபடி எதிர்வரும் 12.10.2015 திங்கட்கிழமையன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா கலையரங்கில் **"அனைவருக்கும் உயர்கல்வி"** என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் சிறப்பாக நடத்தத் திட்டமிடப்பட்டு அதற்கான பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அக்கருத்தரங்கின் துவக்க விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களும், உயர்கல்வித்துறைச் செயலர் அவர்களும் துணை வேந்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும், நிறைவு விழாவில் நமது இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களும் தோழமைச் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

கருத்தரங்க நிகழ்வுகள் தொய்வில்லாமல் நடைபெற உயர்மட்டக் குழு முடிவின்படி ஒவ்வொரு உறுப்பினர்களிடமிருந்தும் கருத்தரங்க நிதியாக ரூ.300/- (ரூபாய் முந்நூறு மட்டும்) பெற்று வெகு விரைவில் கருத்தரங்கப் பொருளாளரிடம் வழங்கிட வேண்டும். அதற்கான ரசீதுப் புத்தகம் உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. மண்டல மற்றும் கிளை பொறுப்பாளர்கள் இதன் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கருத்தரங்கின் பிரதான நிகழ்வுக்கு உயர்கல்வி பற்றிய ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தங்களது படைப்புகளை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தட்டச்சு செய்து அதனை Times new Roman, font size12 என்ற அளவில் tngctaconference@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிடல் வேண்டும். தமிழில் அனுப்பிட விரும்புபவர்கள் அதற்கான Font-ஐயும் சேர்த்து அனுப்பிட வேண்டுகிறோம். படைப்புகளை pdf Format-ல் அனுப்புதல் கூடாது எனவும் கேட்டுக் கொள்கிறோம். கருத்தரங்கக் கட்டுரைகளை சுருக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவினருக்கு முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி மேலும் விபரங்கள் தேவைப்படுவோர் பேராசிரியர் G.நடராஜன், முதல்வர் (பொறுப்பு), இராஜேஸ்வரி வேதாச்சலம் அரசு கலைக் கல்லூரி, செங்கல்பட்டு என்பாரை 9486726066 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

கருத்தரங்க மலருக்கு விளம்பரங்களை தனிநபர், வியாபார நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து கீழ்காணும் கட்டண விகிதப்படி பெற்றுத்தர வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| முன் அட்டை பின்புறம் (கலர்) | ரூ. | 12,000 |
| பின் அட்டை (கலர்) | ரூ. | 15,000 |
| பின் அட்டை பின்புறம் (கலர்) | ரூ. | 12,000 |
| முழுப்பக்க விளம்பரம் (கலர்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்க விளம்பரம் (கருப்பு வெள்ளை) | ரூ. | 6000 |
| அரைப்பக்க விளம்பரம் (கலர்) | ரூ. | 5000 |
| அரைப்பக்க விளம்பரம் (கருப்பு வெள்ளை) | ரூ. | 3000 |
| கால்பக்க விளம்பரம் (கலர்) | ரூ. | 2500 |
| கால்பக்க விளம்பரம் (கருபபு வெள்ளை) | ரூ. | 1500 |

விளம்பர விவரங்களை CD-யில் பதிவு செய்து அதற்கான கட்டணத்துடன் எந்த வகையில் அச்சிட வேண்டும் என்பதையும் தெளிவாக குறிப்பிட்டு அனுப்பிட வேண்டுகிறோம்.

மாநாட்டுக்கென தனியாக வங்கிக் கணக்குத் துவக்கப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| | | Conference Treasurer |
| Name | : | TNGCTA Conference - 2015 |
| Account no | : | 3490495398 |
| IFSC Code | : | CBIN0280884 |
| MICR Code | : | 600016023 |
| Branch | : | Central Bank of India, Triplicane |

கருத்தரங்க நிதிகளை மேற்காணும் விபரப்படி வங்கிக் கணக்கில் செலுத்திட வேண்டுகிறோம். இயக்கத்தின் வலிமையையும், ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும், சாதுர்யத்தையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பமாகக் கருதி அனைத்து உறுப்பினர்களும் தவறாது கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுடன்

சென்னை
25.09.2015

முனைவர். சி. ஜோதி வெங்கடேஸ்வரன்
கருத்தரங்க செயலர்